## யுத்தத்திற்கு பிந்திய இலங்கையில் நல்லிணக்கத்திற்கு மீள்தொடக்கத்தை வழங்கவேண்டிய தேவை

***மே, 2017, கொழும்பு, இலங்கை:*** இலங்கையின் யுத்தம் முடிவடைந்து எட்டு வருடங்கள் நிறைவுபெற்றுள்ளமை உருவாகியுள்ள முன்னேற்றங்கள் மற்றும் அர்த்தபூர்வமான நல்லிணக்கத்திற்கான வாய்ப்புகள் குறித்து கவனத்தை திருப்பியுள்ளது. நிலைமாற்றுக்கால நீதியும் நல்லிணக்கமும் எதிர்கொள்ளும் கடும் சவால்களை புறக்கணித்துவிட்டு சமீப காலங்களில் இறுதி யுத்தம் குறித்தே அதிக கவனம் செலுத்தப்படுவதை காணமுடிகின்றது. குறிப்பாக இருதரப்பிற்கும் எதிரான சர்வதேகுற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுகள், பொறுப்புக்கூறுவதற்கான வேண்டுகோள்கள் மற்றும் இது தொடர்பிலான வழிமுறைகள் மற்றும் பொறிமுறைகள் தொடர்பில் அதிகம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கையை தொடர்ச்சியாக ஆட்சிபுரிந்தவர்களாலும் அரச தரப்பற்றவர்களாலும் தசாப்தகாலமாக திட்டமிடப்பட்ட முறையில் முன்னெடுக்கப்பட்ட அதிர்ச்சியளிக்கும் அநீதிகள், அரசியல் வன்முறைகள் காரணமாக பல இலங்கையர்கள் ஆழமாக பிளவுபட்டவர்களாகவும் காயப்பட்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இதேவேளை தற்போதைய அரசாங்கம் இரண்டு வருடங்களிற்கு மேல் ஆட்சிபுரிந்துள்ள போதிலும் அரசாங்க சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது என்பது கவலையளிக்கும் விதத்தில் கடும்சவாலிற்கு உள்ளாகியுள்ளதுடன் நல்லிணக்கம் என்பது கண்ணிற்கு தென்படாததாகியுள்ளது. இந்த சூழமைவின் கீழ் மாற்றுக் கொள்கை நிலையம் 2015இல் அரசமைப்புச் சீர்திருத்தம் நிலைமாற்றுக்கால நீதி மற்றும் ஆட்சி தொடர்பாக வழங்கப்பட்ட வாக்குறுதிகளை சாத்தியமாக்குவதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றது.

அது உண்மையான தேசிய திட்டமாக காணப்படவேண்டும் - மேலும் அது 2015இன் வெற்றிக் கூட்டணியின் விசேட தன்மையான இலங்கையின் வரலாற்றிலேயே மிகப்பெரிய பரந்துபட்ட கூட்டணி என்பதை பயன்படுத்தியதாக காணப்படவேண்டும். இந்தச் செயற்திட்டத்தை வடிவமைத்தலையும் நடைமுறைப்படுத்துவதையும் அவசரமான தேசிய முக்கியத்துவம் மிகுந்த விடயமாகக் கருதவேண்டும் மேலும் பொதுமக்களின் ஆதரவை உரியமுறையில் பெறவேண்டும்.

கடந்த பல வருடங்களில் முரண்பாடுகளில் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்குமான பல சந்தர்ப்பங்களை இலங்கை தவறவிட்டுள்ளது. யுத்தத்தின் முடிவில் கிடைத்த சந்தர்ப்பத்தை எதேச்சாதிகார, வெற்றிமனப்பான்மை கொண்ட, பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சமூகத்தின் துயரங்களிற்கு தீர்வு காண்பது குறித்த அக்கறையற்ற அரசாங்கம் தவறவிட்டது. மாறாக அது முன்னர் எப்போதும் இல்லாத அளவு இராணுவமயப்படுத்தல், ஊழல், குடும்ப ஆட்சி, உடன்பட மறுத்தலை மதிக்காமை, சிறுபான்மை சமூகத்தின் மீது தாக்குதல் போன்றவற்றை ஊக்குவித்ததுடன் தண்டனையிலிருந்து விலக்களிக்கப்படுதலை ஆழவேர் ஊன்றச்செய்தது. கடந்த கால துஷ்பிரயோகத்திற்குத் தீர்வைக் காண்பதற்கான வாக்குறுதிகளிற்காக கண்துடைப்பு நடவடிக்கைகளாக விசாரணை ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இவை பதில் கோரிநிற்கின்ற ஆயிரக்கணக்கான சக பிரஜைகளிற்கு உரிய பதிலை வழங்கத்தவறின.

2015 ஜனவரியிலும் ஆகஸ்டிலும் புதிய ஜனநாயக அரசியல் கலாச்சாரம் மற்றும் நேர்மையான நல்லிணக்க செயற்பாடுகள் குறித்து உறுதியளித்த, முன்னர் எப்போதும் இல்லாத கூட்டணிக்கு வாக்களித்ததன் மூலம் குறிப்பிடத்தக்க இலங்கையர்கள் எதேச்சதிகாரத்தை நிராகரித்தனர். எனினும், இரண்டு வருடத்திற்கும் அதிகமான காலத்தின் பின்னர் மாற்றத்திற்கான வாய்ப்புகள் வேகமாக குறைவடைகின்றன, குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதனையும் பொதுவெளியில் காணமுடியவில்லை. அரசமைப்பின் 19ஆவது திருத்தம், தகவல் உரிமை சட்டமூலம் போன்ற ஆரம்பகால முன்னேற்றங்களிற்கு அப்பால் தங்களினதும் தேசத்தினதும் எதிர்காலத்தை வடிவமைக்கும் முக்கிய செயற்பாடுகளில் பல இலங்கையர்கள் இணைத்துக்கொள்ளப்படாமையை காண முடிகின்றது. இலங்கையின் பல பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களும் சமூகங்களும் தொடர்ச்சியாக முன்னெடுத்துள்ள ஆர்ப்பாட்டங்கள் பல விடயங்கள் குறித்து அவசர கவனம் செலுத்தவேண்டியுள்ளதையும் இந்த அரசாங்கம் முன்னைய அரசாங்கத்திலிருந்து வேறுபட்டதல்ல என்ற உணர்வு அதிகரிப்பதையும் புலப்படுத்தியுள்ளன. கடந்த சில மாதங்களில் கொள்கை சீர்த்திருத்தங்களில் பிரஜைகளின் பங்களிப்பு முற்றாக அற்றுப்போயுள்ளதையும், கொள்கைகள் மற்றும் சட்டங்களை உருவாக்குவதில் இரகசியதன்மை பேணப்படுவதையும் மற்றும் உரிமை, பாதுகாப்பு உரிய நடைமுறைகளிற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய சட்ட கட்டமைப்புகள் அறிமுகப்படுத்தப்படுவதையும் காணமுடிந்துள்ளது. மேலும், நல்லிணக்கம் என அடிக்கடி கூறிக்கொள்கின்ற போதிலும் இந்த அரசாங்கம் நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வு தொடர்பான கொள்கை குறித்து சமூகத்தின் பரந்துபட்ட பிரிவினருடன் இன்னமும் தொடர்புகொள்ளாததையும் காணமுடிகின்றது. அவ்வாறு செய்தால் அரசாங்கம் இந்த விடயத்தில் காணப்படும் சவால்களை உணரக்கூடும், எதிர்கொள்ளக்கூடும். மேலும், நிலங்களை விடுவித்தல் காணாமற்போகச்செய்யப்பட்டவர்களின் விவகாரத்திற்குத் தீர்வை காணுதல் போன்ற விடயங்களில் காணப்பட்ட ஆரம்பகால உற்சாகங்கள் முடங்கியுள்ளன. காணமற்போனவர்களிற்கான அலுவலகத்தை அரசாங்கம் இன்னமும் ஏற்படுத்தவில்லை. 2015இல் நிலைமாற்று நீதியை நிலைநாட்டுவதற்காக ஏற்படுத்தப்படும் என வாக்குறுதியளிக்கப்பட்ட பொறிமுறைகள் எவையையும் அரசாங்கம் இன்னமும் ஏற்படுத்தவில்லை.

தசாப்தகால வன்முறைகள் மற்றும் அநீதிகளால் ஏற்படுத்தப்பட்ட ஆழமான பிரிவினைகள் நம்பிக்கையின்மை போன்றவற்றினை குணப்படுத்துவதற்கான இலகுவான மருந்துகள் இல்லை. நல்லிணக்கம் என்பது நீண்டகால குழப்பகரமான நடவடிக்கை - அது வலிமிகுந்த பிரிவினைதன்மை கொண்ட கடந்த காலத்தை ஆராயவேண்டும், ஏற்றுக்கொள்ளவேண்டும், அங்கீகரிக்கவேண்டும். அந்த செயற்பாட்டிற்கு தொலைநோக்கு கொண்ட, ஆபத்துக்களை எதிர்கொள்ளக்கூடிய குறுகிய, சுயநலம் மிக்க நிலைப்பாடுகளை கடந்து வரக்கூடிய, பிரஜைகளை நெருக்கடியான தருணங்களில் வழிநடத்தக்கூடிய, ஆழமாக பிளவுபட்டுள்ள சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய தலைவர்கள் அவசியம். சீர்திருத்தங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, கடந்த காலங்களை அங்கீகரிப்பது போன்ற விடயங்களில் அரசாங்கத்தின் சில தலைவர் காண்பிக்கும் இரட்டை முகப்போக்கு என்பது கூட்டணி அரசாங்கத்தின் தேவைகளை கருத்தில் கொள்ளும்போது ஆச்சரியமளிக்கும் ஒன்றல்ல. எனினும், யுத்தத்திற்குப் பிந்திய சூழலில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட நிலையில், இதனை விட மேம்பட்ட தலைமைத்துவம் இல்லாததும் சீர்திருத்தத்திற்கான விசேட வாய்ப்புகள் தவறவிடப்படுவதும் கவலையையும் ஏமாற்றத்தையும் அளிக்கின்றது. சீர்திருத்த திட்டம் என வாக்குறுதியளிக்கப்பட்ட ஒன்றிற்காக போராடும் பொறுப்பு ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் உள்ளது. செயலின்மையும் அக்கறையின்மையும் அர்த்தபூர்வமான நல்லிணக்கம் குறித்த புதிய நம்பிக்கைகளை சிதறடித்து அதிகளவு எதேச்சாதிகாரத்திற்கு வழிவகுக்கும்.